ISSN:2582-9599



# தொல்காப்பியத்தில் கல்விச் சிந்தனைகள்

**முனைவர் கி சத்யா**

**அகவல் மின்னிதழ், ஆசிரியர்**

10

**ஆய்வுச் சுருக்கம்:**

தொல்காப்பியம் தமிழ் மொழிக்குக் கிடைத்த அறிய இலக்கண நூலாகும். இவ்விலக்கணத்தின் வழியே தான் தமிழின் தொன்மையும் தூய்மையையும் தமிழரின் பண்பாடும் நாகரிகமும் வெளிபடுகின்றது. அந்த வகையில் தொல்காப்பியம் கல்விச் சிந்தனைகளை நமது காலகட்டத்திற்கு ஏற்றவாறு விதைத்துள்ளது. இலக்கணக் கல்வியின் அடிப்படை நோக்கம் மாணவர்களின் கருத்து பரிமாற்றத்தினை வளர்ப்பதாகும். இதனடிப்படையில் மாணவர்களே, எதிர்காலத்தில் சமுகத்தில் வாழும் மக்களாவர். அதனை நினைவில் கொண்டு ஒவ்வொருவருக்கும் ஏற்ற கல்விச்சிந்தனைகளை கூறியுள்ளது தொல்காப்பியம்.

**திறவுச் சொற்கள்:**

நூல், நூல் அமைப்பு, எழுத்து, தொழில்.

**முன்னுரை:**

நல்ல நூல்கள்தாம் நல்ல தலைமுறையை வளர்த்தெடுக்க முடியும். நூல்களில் இடம் பெரும் கருத்துக்கள் சிறப்பாக அமையும் போதுதான் அந்நூல்கள் கட்டுடையவனாகக் கருதப்படும். இலக்கணக்கல்வி என்பது கட்டமைப்புடன் நுட்பக்கூறுகளை உள்ளடக்கியதாக மொழித்திறனை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

“ நூல் எனப்படுவது நுவலுங்காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றி
தொகையினும் வகையினும் பொருண்மைக்காட்டி
உள்நின்று அகன்ற உரையோடு புணர்ந்து
நுண்ணதின் விளக்கல் அது அதன் பண்பே ”

நூல் எனப்படுவது முதலும் முடிவும் கொண்டதாக அமைந்து காணப்பட வேண்டும். அதோடு மட்டுமல்லாது தொகுத்தும், வகுத்தும் பொருள்படக்கருத்துக்கூறி, விரித்துச் சொல்லக்கூடியதாகவும் இருக்கவேண்டும். நுட்பமுடையதாகவும் கருத்தாழம் நிறைந்த பண்பினைப் பெற்று அமையும் நூல்கள் சிறப்புடைவதாக விளங்கும் என்று தொல்காப்பியம் கூறுவதால் கருத்துக்களுடன் கூடிய கல்விச்சிந்தனைகளுக்கு இலக்கணங்கள் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றன என்பதை அறியலாம். மேலும் இக்கட்டுரையில் நூலுக்குரிய இலக்கணம், வாய்மொழிக்கல்வி, நூல்மொழிக்கல்வி, எழுத்துக்கல்வி, தொழில்லடிப்படைக் கல்வி என்ற வகையில் அமைந்துள்ளது.

**நூலுக்குரிய இலக்கணம்:**

நூலுக்குரிய இலக்கணமாக ஒத்த சூத்திரத்திற்கு உரை நடத்தல் வேண்டுவனவாகிய வழி பிறந்த காண்டிகையும் அக்காண்டிகையலும் விளங்காத காலத்து அதனையும் விளக்கக்கூறும் உரை விகற்பகத்ததுமாகிய பத்து வகை குற்றமின்றி நுண்பொருளோடு முப்பத்திரண்டு உத்திகளையும் கொண்டதே சிறந்த நூலகப் புலவர் சொல்வார்கள் என்று தொல்காப்பியர்,



சென் நெக்சஸ் டாக்டர் கவிசென் அகாடமி,
சென் புக் வரைட் நவ் ஹப், சென் கலை மற்றும் கலாச்சார மன்றம் &
உலகத் தமிழன் பதிப்பகம்
இணைந்து நடத்திய
"ஆசிரியர் தினப் பல்துறைப் பன்னாட்டுக் கருத்தரங்கம்"

SEN NEXUS DIGITAL ECO SYSTEM

உலகத்தமிழன் பதிப்பகம்

**“”ஒத்த சூத்திரம் உரைப்பின் காண்டிகை**
**மெய்ப்படக் கிளந்த வகையது ஆகி**
**ஈர் ஐங் குற்றமும் இன்றி நேரிதின்**
**முப்பத்திரு வகை உத்தியொடு புணரின்**
**நூல் என மொழிப நுணங்கு மொழிப் புலவர்.””**

என்பர். நூல் அமைய வேண்டிய முறைகளைச் சுட்டிக்காட்டிக், நூல் யாக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளைத் தொல்காப்பியர் இலக்கணப்படுத்தியுள்ளார்.

பிற்காலத்தில் இயற்றப்பட்ட நன்னூல், நூல்கள் அமைய வேண்டிய முறை பற்றித் தெளிவாக எடுத்துரைக்கிறது. குற்றம், அழகு, உத்தி, ஒத்து முதலியன குறித்து நன்னூலார் குறிப்பிட்டுள்ள கருத்துகள் நெறிப்பட்ட கல்வி அக்காலத்திலிருந்தது என்பதற்குரிய சான்றுகளாக விளங்குகின்றன.

**வாய்மொழிக்கல்வி:**

வாய்மொழிக்கல்வியே கல்விக்கு மூலக்காரணமாக இருந்துள்ளது என்பதை இலக்கணங்களின் வழியாகக் காணலாம். தொல்காப்பியம், முதல் நூலாகக் கருதப்பட்ட போதிலும் அதற்கு முன்னதாகவும் கல்விச்சிந்தனைகள் இருந்துள்ளமையை அறிந்து கொள்ள முடிகிறது. வாய்மொழிக்கல்வி கற்பிக்கப்பட்ட கால கட்டத்தில் மாணவர்கள் ஆர்வத்தோடு கல்வி கற்றிருந்தனர். தொல்காப்பியதிற்கு முன்னர்க் கல்வி சிந்தனை இருந்துள்ளது என்பதனை

**“வரைவின் றென்பு வாய்மொழிப்புலவர்”**

என்று இலக்கணத்தின் அமைச்சீர் வாய்மொழிபுலவர் கூறியதாகத் தொல்காப்பியர் கூறுகின்றனர்.

வாய்மொழிக்கல்வி என்பது வெறும் இலக்கியக் கல்வியை மட்டும் குறிப்பதாக நாம் கருதுகிறோம். ஆயின் இலக்கணக் கல்வியும் வாய்மொழியாகவே கற்பிக்கப்பட்டதென்பதை தொல்காப்பியர் ,

**“ எழுத்து முதலா ஈண்டிய வடியிற்**
**யாப்பென மொழிப யாம்பறிபுலவர் ”**

என யாப்பைப் பற்றிக் கூறுவதிலிருந்து வாய்மொழி வழியாக இலக்கணக் கல்வி கற்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிந்துக்கொள்ள முடிகிறது.

**எழுதுக்கல்வி:**

மொழி வெறும் பேச்சாக மட்டும் இருந்து பின்னாளில் எழுத்து மொழியாக்கப்பட்டது. எழுத்துக் கல்வியின் வளர்ச்சி நிலையே இன்னும் பரந்துபட்டதாகப் காணப்படுகிறது.

**“ அவற்றுள்**
**இயற்சொல் தாமே**
**செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவனித்**
**தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே!”**

என்று நிலம். நீர், காற்று, அறிவு, பண்பு போன்ற தமிழ் கூறும் நல்லுலகத்து வழங்கும் சொற்கள் அனைத்தும் இயற்சொற்கள் என்று கூறப்படுவதாகவும் செந்தமிழ் என்று தொல்காப்பியம் முதன்முதலில் குறிப்பிடுவதாலும் தமிழகத்தில் பேச்சு மொழியைத் தொடர்ந்து எழுத்து மொழி

உருவாகிருக்கலாம் என்பதை அறியமுடிகிறது.

**“ செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தம் குறிப்பனவே திசைச் சொல் கிளவி”**

என செந்தமிழ் நிலத்தைச் சார்ந்த தென்பாண்டி, குடம், குட்டம், அருவா, குடகர் எனச் செந்தமிழ் நிலத்தைச் சார்ந்தவர்கள் ஒரு கூட்டமைப்பாகப் பேசிய மொழி தமிழ் மொழியாகும் என்பதும் தொல்காப்பிய நூற்பாவில் அறியக்கிடைகிறது.

**தொழிற்கல்வி**:

பண்டைக்காலத் தமிழ் மக்கள் இனக்குழுச் சமூகமாக வாழ்ந்து வந்த காலக்கட்டத்தில் பொருள் தேட தலைவன் பிரிந்து செல்கிறான் இதனை,

**“ பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே**
**உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கம்”**

பொருள் தேடும் காலத்துத் தலைவன் வராததால் தலைவியும் அவன் தாயும் தேடிச்செல்கின்றனர். அவர்கள் தலைவனைப் பற்றி செய்திகளையும் குற்றமற்ற சிறப்பினையுடைய உயர்ந்தோரிடம் கேட்டுத் தம் ஐயத்தினைப் போக்கிக்கொண்டனர். பண்டைத் தமிழர் உயர்ந்தோரைக் குற்றம் நீங்கப் பெற்றவராகவே கருதியுள்ளார்கள். இதனை,

**“கிழவோன் அறியா அறிவினன் இவளென**
**மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்**
**ஐயக்கிளவி அறிதலும் உரித்தே”**

என்னும் நூற்பாவில் அறியலாம். பொருளுக்காகப் பிரிதல் என்பது தொழில் அடிப்படை என்றாலும் அத்தொழிலில் நேர்மையுடன் விளங்குவதாகத் தொல்காப்பியர்,

**“ உழைக் குறுந்தொழிலும் காப்பும் உயர்ந்தோர்**
**நடக்கை எல்லாம் அவர்கட்படுமே ”**

என்ற மெய்க்காலத்தில் என்பது உயர்ந்தோற்குரிய செயல் என்று குறிப்பிடுகின்றனர்.

**நாடக்கல்வி**:

நாடகத்தின் மூலம் மக்களுக்குப் பலவிதமான கருத்துக்களையும், சமுதாய சிந்தனைகளையும் நடித்துக் காட்டியுள்ளனர். சங்க இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் நாடகம் குறித்த குறிப்புகள் காணப் பெறுகின்றனர். தொல்காபியதிலும் நாடகம் குறித்துத் குறிப்புகள் இருப்பதால்
நாடகத்திற்கென்று தனியான ஆசிரியர்கள், மாணவர்கள் இருந்து கற்றல், கற்பித்தல் நடைபெற்றிருக்கலாம் எனக் கருதமுடிகின்றது.

**“ நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம் “**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதன் வழி நாடகம் குறித்த செய்திகளை அறியமுடிகிறது.

**சிற்பத்தில் கல்வி:**

கலை நுணுக்கங்களில் சிறப்புடையது சிற்பமாகும். பழங்காலத்திலிருந்தே சிற்பங்கள்

இருந்தமைக்கான சான்றுகளை கலைச்சிறப்பு கூடிய வரலாற்றுச் சிறப்பு மிக்க கோவில்களில் காணமுடிகிறது.

**“இயங்கு படை அரவம் எரிபரந்து எடுத்தல்**
**வயங்கல் எய்திய பெருமையானும்**
**அழிபடை தட்டோர் தழிச்சியொடு தொகை இந்**
**கழிப்பெருஞ் சிறப்பின் துரை பதின்மூன்றே”**

போர் நடைபெறுவதையும் படைவீரர்களின் பெருமையையும் வாகை சூடிய நிலையையும் பிற்காலத்தவரும் தெரிந்து கொள்ளும் வகையில் அந்நிகழ்வுகளைச் சிற்ப வேலைப்பாடுகளுடன் நடுகல்லில் பொரித்துள்ளார்கள் என்பதைச் தொல்காப்பிய நூற்பாவில் காணலாம்.

இவ்வாறாக இலக்கண கல்வியானது, நூலும் நூலின் இலக்கணமும், வாய்மொழிக்கல்வி, எழுதுக்கல்வி, தொழிற்கல்வி, நாடககல்வி, சிற்பக்கல்வி போன்ற கலை நுட்பத்திலும் தொல்காப்பியர் இலக்கண நெறியோடு கல்விச் சிந்தனைகளுக்கு முன்னோடியாக இருந்து வழிகாட்டியாக செயல்பட்டிருக்கிறார். இதன் மூலம் தமிழ் மொழி இன்றளவும் நிலைப்பெற்று மக்களின் சிந்தனை வளர்ச்சியை முறைப்படுத்தி அமைந்துள்ளதை காணலாகிறது.

**துணை நூல்கள்:**

1 . சோம இளவரசு இலக்கண வரலாறு ,
2 . தொல் – பொருளதிகாரம் – செய்யுளியல்,
3 . தொல் – பொருளதிகாரம் – மரபியல்